# அறிவித்தல்

## நிர்மாண வேலைகளுக்காக ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

## ஓய்வூதியத் திணைக்களம்

2026/2027 ஓய்வூதியத் திணைக்களத்தின் பிரதான அலுவலகத்தில் மற்றும் களனி வெதமுல்ல ஓய்வு பெற்றோர் விடுமுறை இல்லத்தின் கட்டடங்கள் வீதிகள், பூங்காக்கள், மின் தொகுதிகள், நீர்க் குழாய்த் தொகுதிகள், கழிவு நீர்த்தொகுதிகள் மற்றும் வேறு நிர்மாணங்கள், பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் தொடர்பான ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்வதற்காக விண்ணப்பப்படிவங்கள் விநியோகித்தல் 2026.01.23ஆம் திகதி முதல் 2026.02.09ஆம் திகதி வரை நடைபெறும்.

பதிவு செய்வதற்கு எதிர்பார்க்கும் சகல விண்ணப்பதாரர்களும் விண்ணப்பப்படிவங்கள் கோரும் திகதிக்கு நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) செல்லுபடியான பதிவைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். அவ்வாறே சகல விண்ணப்பதாரர்களும் குறித்த தரங்களில் உரிய இற்றைப்படுத்தல்களை பதிவிற்கு முன்னர் உறுதிப்படுத்தல் வேண்டும்.

பதிவு செய்வதற்கு எதிர்பார்க்கும் விண்ணப்பதாரர்கள் இதற்கான விண்ணப்பப்படிவத்தை ஓய்வூதியத் திணைக்களத்தினால் பெற்றுக் கொள்ள வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப்படும் கால எல்லைக்குள் வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை ஓய்வூதியத் திணைக்களத்தின் காசாளரிற்கு ரூபாய் 500.00 உடைய மீளளிக்கப்படாத தொகையொன்றை வைப்புச் செய்து நிர்வாகப் பிரிவினால் விண்ணப்பப்படிவத்தை பெற்றுக் கொள்ளலாம்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2026.02.12ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு கிடைக்கப் பெறுமாறு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 2026/2027 ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் எனக் குறிப்பிட்டு பணிப்பாளர் நாயகம், ஓய்வூதியத் திணைக்களம், மாளிகாவத்த, கொழும்பு -10 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும்.